**சார்பு நீதிமன்றம்,திருத்துறைப்பூண்டி**

**MCOP. 145 /2023**

நாள் 13.02.2025

**ம.சா.1. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

நான் தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரில் பட்டுகோட்டை சாலையில் கடைதெருவில் முத்து ஆட்டோ ஒர்க்ஸ் அருகில் கிழக்கிலிருந்து மேற்குநோக்கி நடந்து செல்லும் போது எனக்கு பின்னால் வந்த நான்கு சக்கர வாகனமான (வேன்) மோதிவிட்டதாக புகாரிலும், முதல் தகவல் அறிக்கையிலும் (ம.சா.ஆ.1ல்) சொல்லியுள்ளேன் என்று சொன்னால் நான் அவ்வாறு சொல்லவில்லை. விபத்து சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தாரர்கள். நான் போலிசார் விசாரணையின் போது இருசக்கர வாகனத்தில் வந்தபோது அங்கு கிடந்த கருங்கல் சல்லமுட்டில் சரிக்கி கீழே விழுந்துவிட்டேன் எனவும், அதில் ஏற்பட்ட காயத்தை பார்த்தவுடன் பின்னால் வந்த TATA vensar (TN 50 J 8628) என்ற வாகனம் மோதியதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் போலிசில் கொடுத்த புகாரைப்பெற்று உதவி ஆய்வாளர் விசாரணை மேற்கொண்டு சாட்சிகளை விசாரணை செய்து நான் கொடுத்துள்ள புகார் உண்மைக்கு புறம்பானது என கூறி RCS Notice 11/2017ன் படி எனக்கு சார்வு செய்யப்பட்டது என்று சொன்னல் அதுபோல் நோட்டீஸ் ஏதும் நான் வாங்கவில்லை. 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரால் இந்த விபத்து ஏற்படவில்லை என்றும், அவருக்கு எதிராக பொய்யான புகாரை கொடுத்து நஷ்ட ஈடு பெறவேண்டி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.பொய் புகாரின் அடிப்படையில் இந்த வழக்கை தாக்கல் செய்து 2ம் எதிர்மனுதாரர் இன்சூரன்ஸ் கம்பெனியிலிருந்து அதிக நஷ்ட பெற வேண்டி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.